ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2137/66 - 2019 අගෝස්තු මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.08.22

*2137/66 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**5 ஆவது திருத்தம்**

இலங்கைக் கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இல. 1670/33 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இல. 1695/15 மற்றும் 2011, மாச்சு 01 ஆந் திகதிய, இல. 1865/36 மற்றும் 2014, யூன் 06 ஆந் திகதிய, இல. 1981/99 மற்றும் 2016, ஓகத்து 27 ஆந் திகதிய, இல. 2070/7 மற்றும் 2018, மே 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களினால் திருத்தப்பட்டவாறான, இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுவதோடு, இந்த திருத்தப்பட்ட ஏற்பாடுகள் அமைச்சரவையினால் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்ட 2019, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி முதல் செயற்படும் வண்ணம் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2019, ஓகத்து 07.

1A - G 30798 — 20 (2019/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*10.1.1.1*

(i) *சேவை வகுதியில் தரம் III இல் ஆகக் குறைந்தது ஆறு வருட (06) செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.*

(vi) *அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வு வழங்கப்படும் திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.*

*10.2.1.1*

(i) *சேவை வகுதியில் தரம் II இல் ஆகக் குறைந்தது ஆறு வருட (06) செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் ஆறு (06) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.*

(iv) *அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்திற்கு அமைய பதவி உயர்வு வழங்கப்படும் திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காண்பித்திருத்தல்.*

*10.2.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு கீழாக பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது.*

***குறிப்பு :***

*அமைச்சரவையினால் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்ட 2019, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிக்கு தரம் II இற்கு பதவி உயர்வு பெறவேண்டியுள்ள திருத்தப்பட்ட 10.1.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அந்தத் திகதிக்கு முன்னர் தரம் II இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், தரம் III மற்றும் தரம் II இல் 12 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை மற்றும் 10.2.1.1(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைத் தவிர 10.2.1.1 இன் கீழுள்ள ஏனைய அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்யும் திகதியிலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்தப்படுவர்.*

*9-167*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.